மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!

# வாலாஜாபேட்டை நகராட்சி

## நகரமன்ற சாதாரணக் கூட்டம்

## வாலாஜாபேட்டை நகராட்சியில் 2018-ம் வருடம் ஜூலை மாதம் 27-ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் நகரமன்றக் கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்

**முன்னிலை: திரு.கு.அசோக்குமார், பி.காம்., அவர்கள்**

**தனி அலுவலர்**

**மன்றப் பொருள்கள்**

1. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(MA.IV) துறை வெளியிட்டுள்ள அரசு ஆணை 166, நாள்:23.11.2016-ன்படி நகராட்சி பகுதியில் உள்ள நகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் கழிப்பறைகள் மற்றும் பள்ளி வளாகங்களில் தூய்மை செய்யும் பணிக்கு மாவட்ட ஆட்சியர், வேலூர் மாவட்டம், வேலூர் அவர்கள் நிர்ணயம் செய்துள்ள தொகையில் தினக்கூலி அடிப்படையில் பணியாளர்களை தற்காலிக நியமித்து பணிகளை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதின் பேரில், இந்நகராட்சியில் 6 நகராட்சி பள்ளிகள் மற்றும் 1 அரசு பள்ளி இயங்கி வருகின்றன. அரசு ஆணையில் தெரிவித்துவாறு 6 நகராட்சி பள்ளிகள் மற்றும் 1 அரசு பள்ளி மொத்தம் 6 பணியாளர்கள் தேவைப்படுகின்றன. இப்பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயித்துள்ளபடி ஊதியம், சேமநல நிதி பிடித்தம் மற்றும் கிருமி நாசினி பொருட்கள் உட்பட ஒருவருக்கான செலவு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒருவருக்கு ஒரு நாள் ஒன்றுக்கு |
|---|---|---|
| 1 | Sri Vari Enterprise,<br>No:101, Shanthi Colony,<br>Anna Nagar, Chennai-40 | ரூ.510/- |
| 2 | Fancy Agency,<br>No:27, Jawahar Street,<br>Krishnamoorthy Nagar,<br>Chennai-118. | ரூ.492/- |

அலுவலகக்குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்,

2)மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்:2-ல் உள்ள Fancy Agency, No:27, Jawahar Street, Krishnamoorthy Nagar,Chennai-118. அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3)மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை குறைவாக அளித்துள்ள Fancy Agency அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதாரப்பிரிவின் கீழ் இந்நகரில் உள்ள காய்கனி மார்க்கெட் மற்றும் ஸ்வீட் ஸ்டால்கள், பஸ் நிலையம், அரசு மருத்துவமனை கம்போஸ்ட் ஆகிய பகுதிகளில் ஈக்கள் தொல்லை அதிக அளவில் உள்ளதாக புகார் தெரிவித்த வகையில் மேற்கண்ட பகுதிகளில் ஈக்களுக்கு கூட்டுப்புழு எறும்பு, கரப்பான் பூச்சி, கொசு முட்டைகள் அழிக்கக்கூடிய READY MIX மருந்து 600 லிட்டர் வாங்கிக்கொள்ளவும் இதற்கு ஆகும் தோராய செலவினத்தொகை ரூ.4,70,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி செலவினத்தை 2018-19-ம் ஆண்டின் வரவு-செலவு திட்டததில் சேர்த்து பொதுநிதியிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:1668/2018/எச்1)

3. இந்நகராட்சிக்கு சொந்தமான 24 வார்டுகளுக்கு பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் சேகரமாகும் குப்பைகளை தரம் பிரித்து மக்கும் தன்மை உடைய குப்பைகளை உரம் தயாரிக்கும் பணிக்கு இந்நகராட்சியில் உள்ள Site Composting மற்றும் பூங்காகள் MCC அமைக்கபடவுள்ளது. எனவே மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்க பயன்படுத்தப்படும் EM SOLUTION (EFFECTIVE MICOROGANISM) இதன் மூலம் சுமார் 1 மாத காலத்தில் குப்பைகள் மக்கி இயற்கை உரங்களாகிவிடும் எனவே EM SOLUTION 500 லிட்டர் வாங்கிக் கொள்ளவும் இதற்கு ஆகும் தோராய செலவினத்தொகை ரூ.4,75,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி செலவினத்தை 2018-19-ம் ஆண்டின் வரவு-செலவு திட்டதகில் சேர்த்து பொதுநிதியிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:1667/2018/எச்1)

4. இந்நகராட்சிக்கு சொந்தமான 24 வார்டுகளில் மொத்தம் 9000 வீடுகள் மற்றும் கடைகள் உள்ளன, பொதுசுகாதாரப்பிரிவிற்கு தேவையான செப்டிக் டேங், ஏர்பைப்புகளுக்கு கட்டப்படும் ஒரு அடி நீளம் அரை அடி அகலமுள்ள நெலான் கொசுவலை 9000 எண்ணிக்கை வாங்கி கொள்ளவும் இதற்கு ஆகும் தோராய செலவினத்தொகை ரூ.2,70,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி செலவினத்தை 2018-19-ம் ஆண்டின் வரவு-செலவு திட்டதகில் சேர்த்து பொதுநிதியிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:1665/2018/எச்1)

5. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடித ந.க.எண்:535/2018/அ4, நாள்:24.05.2018-ம் கடிதத்தில் இந்திய செஞ்சிலுவை சங்கம்,சென்னை அவர்களுக்கு ஆண்டு சந்தா தொகை ரூ.2500/-யை செலுத்த கோரப்பட்டுள்ளது. அதன்படி, இந்திய செஞ்சிலுவை சங்கம்,சென்னை அவர்களுக்கு ரூ.2500/-யை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1)மன்றம் அனுமதிக்கலாம்,

2)மேற்படி செலவினத்தை 2018-19-ம் ஆண்டின் வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:1605/2018/சி1)

6. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் ஆய்வுகூட்டத்தில் மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள பூங்காகளில் Onsite Parking Compost (Micro Compost Centre) பணியினை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதால் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 11 பூங்காகளில் 8 பூங்காகளில் மேற்படி பணியினை மேற்கொள்ள ஆகும் தோராய மதிப்பீட்டு தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்,

2)மேற்படி செலவினத்தை 2018-19-ம் ஆண்டின் வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3)பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:1605/2018/சி1)

7. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்:18971/2016/என்2, நாள்:26.06.2018-ன்படி, இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் 2018-2019-ம் ஆண்டிற்கான (01.07.2018 முதல் 30.06.2019 வரை) தொகையினை செலுத்த கோரி கடிதம் வரப்பெற்றுள்ளதின்படி, ஒரு பணியாளாருக்கு ரூ.2478/- வீதம் 71 பணியாளர்களுக்கு ரூ.175938/- யினை உரிய அரசு தலைப்பில் செலுத்தவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1)மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2)இச்செலவினத்தினை 2018-19-ம் ஆண்டு வருவாய் நிதி மற்றும் குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

3)அவசர அவசியத்தினை முன்னிட்டு தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை செலுத்தியமையினை மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்:சி1/1331/2012)

தனிஅலுவலர்(ம)ஆணையர்,
வாலாஜாபேட்டை நகராட்சி.